# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **39/ந/2018**

ஆணை எண். **118/2018**

நாள் : **04/05/2018**

**திரு P. சரவண சிவாச்சாரியார்,**
**பல்லவபுரம், சென்னை – 117.**

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
சென்னை – 600 044.

– **எதிர் மனுதாரர்**

சென்னை, பழைய பல்லவபுரம், சுப்பிரமணிய நகர், ஸ்ரீ துர்க்கையம்மன் கோவில் தெரு முகவரியில் வசிக்கும் திரு P. சரவண சிவாச்சாரியார் அவர்களின் 07.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 08.03.2018 அன்று பெறப்பட்டு, 39/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, பழைய பல்லவபுரம், சுப்பிரமணிய நகர், ஸ்ரீ துர்க்கையம்மன் கோவில் தெரு முகவரியில் வசிக்கும் திரு P. சரவண சிவாச்சாரியார் என்பவர், கீழ்க்காணும் முறையீடுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார் :-

(1) மூவரசம்பட்டு ஏரியில் கழிவு நீர் கலப்பதைத் தடுத்து, ஏரி மாசுபடுவதைத் தடுக்க வேண்டும் ;

2) மூவரசம்பட்டு – மீனம்பாக்கம் இரயில் நிலையம் செல்லும் சாலையினை சீரமைத்துத் தரவேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறையீடுகள் சம்பந்தமாக பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில், மூவரசம்பட்டு ஏரி பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளதென்றும், அவ்வேரியினை நகராட்சியும் பராமரித்திட இயலாது எனத் தெரிவித்துள்ளார். மேலும், திரிசூலம் ஊராட்சிப்பகுதியில் அமைந்துள்ள உழைப்பாளி நகர், அம்மன் நகர் மற்றும் கென்னடிவேலி போன்ற மேட்டுப்பாங்கான குடியிருப்புப் பகுதிகளில் சேகரமாகும் கழிவு நீர், தாழ்வான பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட ஜெயலட்சுமி நகரில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயில் கலந்து மூவரசம்பட்டு ஏரியில் கலக்கிறது. மேலும், மனுதாரர் சீர்செய்து தரக்கோரும் சாலை திரிசூலம் ஊராட்சிப் பகுதி மற்றும் மூவரசம்பட்டு ஏரிப்பகுதியிலும் அமைந்தும் அச்சாலை பல்லவபுரம் நகராட்சிப்பகுதியில் இல்லாத நிலையில் அதை சீர்செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மூவரசம்பட்டு ஏரியில் கழிவு நீர் கலந்து மாசுபடுவதையும், மூவரசம்பட்டு – மீனம்பாக்கம் இரயில் நிலையம் செல்லும் சாலை பழுதடைந்துள்ளது குறித்தும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட சாலையில் வழிபாட்டுத்தலம் அமைந்துள்ளதையும் குறிப்பிட்டு, சாலையை சீரமைத்துத் தருவதுடன் மின்விளக்கு வசதியினையும் ஏற்படுத்தித் தருமாறு கோரியுள்ளார். மூவரசம் பட்டு ஏரி பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் இருப்பதாலும், சீர்செய்து தரக்கோரும் சாலை திரிசூலம் ஊராட்சிப் பகுதியில் அமைந்துள்ளதாலும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு முறையீடு செய்யுமாறு முறையீட்டு மனுதாருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 4–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 14/5/18

14/5/18

பெறுநர்

1. திரு P. [illegible] சிவாச்சாரியார்,
மலையடிவாரம்,
ஸ்ரீதுர்க்கையம்மன் கோயில் தெரு,
சுப்ரமணிய நகர், பழைய பல்லாவரம்,
சென்னை – 600 117.

2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
மாவட்ட ஆட்சியரகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.

3. செயற்பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.

4. மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.

5. இயக்குநர்,
ஊராட்சிகள் இயக்குநரகம்,
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
சென்னை.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி